# விளம்பரம்™

# VLAMBARAM™

☎ 416-282-8059 ✉ 416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

தி 12 MAY 15, 2002 பாலம் 10


ஐரோப்பாவின் இந்த நாட்டில்
நீங்கள் பிரஜையாகலாம்!!

வாசியுங்கள்

உலக தமிழோசை

காலாண்டு சஞ்சிகை

தமிழ் வர்த்தக நிலையங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.






RE/MAX Above the Crowd!

**வீடு விற்க, வாங்க...**

**Raja M. Mahendran, P. Eng.**
(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!

## அருள் விருந்து

* தூயவாழ்வை விரும்புகிறவன் தினமும் தன்மனத்தைத் தூயதாக்குகிறான். உண்மையையும் அதன் ஆதிக்கத்தையும் தினமும் எண்ணிப்பார்.

* சுயநலம் அகலுமிடத்து ஆனந்தம் தோன்றுகிறது. முடிவில்லாத ஆனந்தமடைவதே வீடுபேறு.

* துயரம் பொறுமையை அழிக்கிறது. துயரம் அறிவை அழிக்கிறது, துயரம் அனைத்தையும் அழிக்கிறது. துயரத்துக்குச் சமனான சத்துரு இல்லை.

* உண்மையை நாடுகிறவன் மௌனமாயிருந்து பழகவேண்டும். மிக மேலான சாதனங்களுள் ஒன்று மௌனம்.

- செ. சிவசுப்பிரமணியம்

**Singapore Communication**

❖ UNBELIEVABLE UNBEATABLE
❖ Reliable & Friendly Service
❖ 50 mins day time Free
❖ Evenings & Weekend Free
❖ Every Day (12noon - 1p.m) Free

**Free Phone & $15.00 Plan***

• Call waiting, Conference Calling & Voice Mail Free
• Add.Day time min 0.30cts only • Bad Credit No Problem
• Offer Ends May 31

**Pl.Call: Sathi /Ashma**

**Office: 416.745.2378/ 416.740.5292 Hot Line 416.866.9700**

5010 Steeles Ave., W., Unit 17ABC - Kipling & Steeles



**சிவாகம கிரியா பீடம்**

**(416) 724-7480**

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

**சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

**416.267.8221**



**Insurance & Financial Services**

**Balan Kanapathi (Agent)**

• Auto
• Home
• R.R.S.P
• Life
• Disability
• Mutual Fund
• Group Insurance
• Child Education
• Travel+ Business

Liberty Mutual London Life

**• 416.321.1515**

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் 103

**விஜய குலத்துங்கம்**



ஒருவரின் மனதில் உள்ளதை மற்றவர் Telepathy' மூலம் உணர்ந்து கொள்ளலாம் என்று பலர் கூற நாம் கேட்டிருக்கின்றோம். ஆனால் இது விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை. இந்த வகையில் 'Mental Telepathy' க்கு, நேரடியாக இணைப்புகள் இன்றி ஒருவரின் மன அலைகள் அனுப்பப்பட்டு, மற்றவரின் மூளையினால் அது பெறப்பட வேண்டும். ஆனால் அண்மையில் செய்த ஒரு பரிசோதனை மூலம் மின் இணைப்புகள் மூலம் ஒரு மூளையிலிருந்து நினைவு அலைகள் கடத்தப்படலாம் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனை அமெரிக்காவிலுள்ள நோர்த் கரோலினாவில் அமைந்திருக்கும் Duke பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Miguel Nicolelis என்பவராலும் அவரது உதவியாளர்களாலும் செய்யப்பட்டது. இந்தப் பரிசோதனையில் ஒரு குரங்கின் மூளையினுள் மின்முனைகளை பதித்தார்கள். இந்த மின்முனைகள் உடலின் இயக்கத்துக்குரிய - அதாவது கை, கால்கள் போன்ற அவயவங்களின் அசைவிற்கு உரிய மூளையின் பகுதியுடன் இணைக்கப்பட்டது. இந்தக் குரங்கின் முன்னால் ஒரு தட்டில் நான்கு மூலைகளிலும் உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டன. மின்முனைகளின் மற்றைய முனைகள் மின்கணினியுடன் இணைக்கப்பட்டு, மின்கணினி ஒரு 'Server' உடன் இணைக்கப்பட்டது. Server மூலம் 600 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் மசசூசே என்னுமிடத்திலுள்ள Massachusser Institute of Technology நிறுவனத்திலுள்ள பரிசோதனைகள் கூடத்திலுள்ள ஒரு இயந்திரக் கை (Robots Arm) மின்கணினியுடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம் குரங்கின் மூளையின் இயக்கத்துக்குரிய நினைவு அலைகளை இந்த இயந்திரக் கையுடன் இணைக்கக்கூடியதாக இருந்தது.

குரங்கு தட்டிலுள்ள உணவைப் பார்த்தவுடன் அதை எடுக்க வேண்டுமென அதன் மூளை கையிற்கு கட்டளையிட்டு, கையை அசையப் பண்ணியதும் இக்கட்டளை மின்முனைகள் ஊடாக மறுமுனையிலுள்ள மின்கணினிக்கு அனுப்பப்பட்டு, மின்கணினி அந்தத் தகவல்களை ஆராய்ந்து, அதற்கேற்ப கட்டளைகளை இயந்திரக் கைக்கு அனுப்பி வைத்தது. குரங்கு எப்படித் தன் கையை அசைத்து உணவை எடுத்ததோ அதைப்போலவே இயந்திரக் கையும் அசைந்து உணவை எடுத்தது. இயந்திரக்கை அமைந்திருந்த பரிசோதனைக் கூடத்தின் இயக்குனரும் சக ஆராய்ச்சியாளரான மண்டயம் சிறீனிவாசன், இயந்திரக் கை அசைந்தது ஒரு விஞ்ஞான அற்புதக் காட்சியென்று விபரித்தார்.

இதற்கு முன்னரும் இதே அடிப்படையில் வேறு பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளன. கலிபோர்ணியாவில் செய்யப்பட்ட ஒரு பரிசோதனையை ஒரு பூனையின் மூளையின் கண்பார்வைக்குரிய பகுதி அதாவது பார்வை நரம்பு (Optic Nerve) க்கு பின்புறமாகவுள்ள பகுதியில் மின்முனைகள் இணைக்கப்பட்டு அதன் மறுமுனைகள் ஒரு மின்கணினியுடன் இணைக்கப்பட்டது. பூனை பார்க்கும் காட்சிகள் மின்கணினியின் திரையில் விழுத்தக்கூடியதாக இருந்தது. இந்த விம்பங்கள் உண்மையான விம்பங்கள் போல் வர்ணங்களில் இல்லாமலும் சற்றுத் தெளிவில்லாமலும் இருந்தன. ஆனால் எப்படியான பொருட்கள் இருந்தன என்பதை அடையாளங்காணக் கூடியதாக இருந்தது.

மேற்கூறிய பரிசோதனைக்கு நேர் எதிர்மாறான பரிசோதனை ஒன்றும் சென்றவருடம் மனிதரில் செய்யப்பட்டது. பூனையில் செய்யப்பட்ட பரிசோதனையில் பூனையின் கண்களூடாக என்ன இருக்கின்றது எனப் பார்க்கக்கூடியதாக இருந்தது. மனிதரில் செய்யப்பட்ட பரிசோதனையில் கண்பார்வையற்ற ஒருவரின் கண்ணுக்கு சற்று முன்பாக ஒரு வீடியோ கமெராவின் வில்லையைப் பொருந்தி அதனூடாக வரும் விம்பங்களை ஒரு மின்கணினி chip இன் மூலம் அலைகளாக மாற்றி அதை மூளையின் பார்வைக்குரிய பகுதியில் செருகப்பட்ட மின்முனைகள் மூலம் மூளைக்கு அனுப்பப்பட மூளை அதை உணரக் கூடியதாக இருந்தது. இந்த மனிதர் முன்னால் இருக்கும் பொருட்களை தெளிவாக பார்க்க முடியாவிட்டாலும் அவற்றை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. இந்த மனிதருக்கு முன்னால் மேசை, கதிரைகள், முக்காலிகள் போன்றவை வைக்கப்பட்டபோது அவர் அவற்றைத் தவிர்த்து மோதாமல் நடந்தார். அத்துடன் சுவரில் மோதாமல், கதவு வழியாக வெளியேறக் கூடியதாகவும் இருந்தது. இந்தப் பரிசோதனை மூலம் எதிர்காலத்தில் கண்பார்வை அற்றோர் இந்த முறைமூலம் பார்க்கக் கூடியதாகச் செய்யப்படும் என நம்பப்படுகின்றது.

முன்னர் கூறிய குரங்கின் மூளையில் செய்யப்பட்ட பரிசோதனை ஆரம்ப நிலையில்தான் உள்ளது. இது மேலும் விருத்தி செய்யப்பட்டு மனிதரிலும் பரீச்சிக்கப்படவிருக்கின்றன.

Stroke வந்தவர்களுக்கு அல்லது பாரிச வாதம் வந்தவர்களுக்கு கை, கால்கள் இயங்கமுடியாமல் இருக்கும். ஆனால் அவர்களின் மூளை சிந்திக்கக் கூடியதாகவும் கை, கால்களை அசைக்கக்கூடிய கட்டளைகளைப் பிறப்பிக்கக்கூடியதாகவும் இருக்கும். அவயவங்களை இயக்க முடியாமல் இருக்கும். ஆனால் எதிர்காலத்தில் இவர்கள் இயந்திரக் கைகளை இயக்கக் கூடயதாக செய்யப்படும் என நம்பப்படுகின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் வெளிவந்த ஆர்னல்ட் சுவாசினேகர் என்ற நடிகர் நடித்த திரைப்படமான 'Total Recall' என்ற ஆங்கிலத் திரைப்படத்தில் மூளையில் மின்கணினி chip ஒன்றை செருகுவது பற்றிய கற்பனைக் கதை சித்தரிக்கப்பட்டிருந்தது. ஒரு இடத்திற்கு சுற்றுலா போவது பற்றிய மின்கணினி chip ஐ மூளையில் செருகிவிட்டால் செருகப்பட்டவர் நேரடியாக அந்த இடங்களுக்கு சுற்றுலா போய் வந்த நினைவுகளை உணரக் கூடியதாக இருக்கும். இப்படியான மின்கணினி chip களை ஒரு நிறுவனம் விற்பனை செய்வதாக அந்தப் படத்தில் வருகின்றது. கதாநாயகனான Arnold செவ்வாய் கிரகத்திற்கு இதன்மூலம் செல்வதாக கதை போகின்றது.

இப்படியான விஞ்ஞான கற்பனைக் கதைகளை உள்ளடக்கிய ஆங்கிலப் படங்களில் வரும் விடயங்கள் எதிர்காலத்தில் நிஜமாக வருவதை நாம் கண்கூடாக கண்டுள்ளோம். எனவே இப்படியான Science Fiction Movies எனப்படும் ஆங்கில விஞ்ஞான கற்பனைக் கதைப் படங்களைப் பார்ப்பதன் மூலம் இன்னும் 100 வருடங்கள் நாங்கள் வாழமுடியாவிட்டாலும் அந்தக் காலகட்டத்தில் உலகம் எப்படியிருக்கும் என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கும்.

• • •

'அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லதுwijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும்
உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?
**கவலையை விடுங்கள்**
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று
இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற



**Vitaplex**
**சம்போ அன்ட கன்டிஷனர்**
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.




Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

**கிடைக்கும் இடங்கள்**
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**
**ரவி நடராஜா**

* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள் * மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்.



**Accident & Traffic Ticket**
**(14 Years Insurance Claims Experience)**

**(416) 245-6555**
**2095 Weston Road**
**Suit 203, Toronto, Ont.**

**(416) 755-2801**
**2390 Eglinton Ave., E.**
**Suite 223, Scar., Ont**

**SAFETY TRUCKS**
**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்
**We Accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
(One On One Training)
அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

**சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்**
**YOGAN SOCKALINGAM**
**Truck Driving** போதனாசிரியர்
(15 Years Canadian Experience with Trucks)
(905) 793-9546 / (416) 616-5979
**250 Summerlea Road, Brampton, Ont.**

# APPLEMORE AUTOMOTIVE

Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


# ஈழத்து இடப்பெயர் ஆய்வு (யாழ்மாவட்டம்)
# பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களின் நூல் வெளியீடு

கடந்த மே 4, 2002 அன்று ஸ்காபுரோ நகரசபை மண்டபத்தில் நிறைந்த பார்வையாளர்களின் மத்தியில் முன்னைநாள் தமிழ் பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் மைந்தனும், ரொறன்ரோ பல்கலைக்கழகப் பேராசிரியரும் முனைவர் திரு. இ. பாலசுந்தரம் அவர்களின் மாணவருமான திரு. செல்வா கனகநாயகம் அவர்களின் தலைமையில் இந்நூல் வெளியீடு இடம்பெற்றது. மேற்படி ஆய்வு நூல்வெளியீடு முனைவர் கவிநாயகர் கந்தவனம் அவர்களின் அறிமுகத்துடன் ஆரம்பமானது.

விழாவின் ஆரம்பத்திலேயே தமிழ்த்தாய் வாழ்த்து, கனேடிய தேசியகீதம்., உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் கொடிக்கீதம் என்பன இசைக்கப்பட்டமை விழாவைச் சிறப்பித்ததெனலாம். சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குமாரசாமிக் குருக்கள், சிவஸ்ரீ தியாகராஜ குருக்கள், இஸ்லாமியர் ராஜா இபிறாகீம் ஆகியோர் இத்தகைய முயற்சிக்கு அவருக்குப் பாராட்டோடு தமது ஆசிகளையும் நல்கினர்.


தொடர்ந்து கலாநிதி ஈழத்துப்பூராடனார் அவர்கள் தமது ஆசியினை நல்கினார். அவர் தமது உரையில் ஈழத்து இடப்பெயர்களின் ஆய்வின் முக்கியத்துவம் பற்றி சிங்களப்பெயர்களாக மாறியுள்ள கிராமங்களின் பெயர்கள் தமிழிலிருந்துதான் வந்துள்ளன. இத்தகைய முயற்சிகள் மேலும் தொடரவேண்டும் என வேண்டிப் பாராட்டினார்.

ஆசியுரைகளைத் தொடர்ந்து கவிஞர் முருக. வே. பரமநாதன் அவர்களினாலும் நண்பரும் முன்னைநாள் கொத்தணி அதிபருமான திரு. த. சிவபாலு அவர்களினாலும் வாழ்த்துப்பா பாக்கள் பாடி வழங்கப்பட்டன.

தொடர்ந்து பேராசிரியர் செல்வா கனகநாயகம் அவர்கள் தமிழர்களின் வரலாற்று ஆதாரங்கள் கிடைப்பதோ மிக்க் குறைவு. இந்நூல் ஒரு ஆதாரமாக பாவிக்கப்படக்கூடிய தன்மையிலே கிடைத்துள்ளமை பாராட்டப்படவேண்டியது என்றும் குறிப்பிட்டார்.

அவரது தலைமையுரையைத் தொடர்ந்து முனைவர் கவிநாயகர் கந்தவனம் அவர்களினால் அறிமுகவுரை நிகழ்த்தபட்டது. பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் ஏழு பேராசிரியர்களிடம் கற்றவர் என்பதனை ஞாபகமூட்டி பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் தனஞ்செயன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சதாசிவம், பேராசிரியர் சண்முகதாஸ் போன்றோரிடம் கற்றவர். அவர்களால் புடம்போடப்பட்ட ஓர் அறிஞரின் படைப்பு எத்தகைய சிறப்புக்களைக் கொண்டு அமையும் என்பதை எடுத்துக்கூறினார்.

ஓர் ஆணின் வெற்றிக்குப்பின்னால் ஒரு பெண் இருக்கின்றார் என்பதைக் குறிப்பிட்ட அவர் விமலா அவர்களின் பங்களிப்புத்தான் இந்தநூலாக்கத்தின் உந்து சக்தி என்றும் கூறி அவருக்குப் புகழாரம் சூட்டினார்.




உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கக் கனடாக் கிளைத் தலைவர் திரு. வேல். வேலுப்பிள்ளை அவர்கள் தம் கழகத்தின் சார்பில் பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களைப் பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார். அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற நூல்வெளியீட்டில் பல் மருத்துவக் வைத்தியர் புஷ்பா வன்னித்தம்பி அவர்கள் முதற்பிரதியை வாங்கி பேராசிரியரைக் கௌரவித்தார். அவரைத் தொடர்ந்து முருகன் புத்தகசாலை உரிமையாளர் திரு. மகேசன் அவர்களும், திரு. சிவா கணபதிப்பிள்ளை அவர்களும் சிறப்புப்பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து நூலாய்வுரை செய்த கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் இடப்பெயர் ஆய்வு என்பது பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு பரந்த துறை எனக்கூறி இது பல்வேறு துறைகளின் சங்கமம் ஆக இருக்கவேண்டிய ஆய்வு மொழியியல், மானிடவியல், வரலாறியல், அகவாழ்வாராய்வியல், சமூகவியல் ஆகிய பரிமாணங்களைக் கொண்டு ஆராயப்பட வேண்டிய ஒரு விடயமாகும். ஆய்வைச் செய்யும் போது இருவிடயங்களை மிக அவதானமாகக் கருத்திற்கொள்ளுதல் வேண்டும். ஆய்வினை அகநிலைப்போக்கு, அறிவியல்போக்கு ஆகிய இருவிடயத்திலும் மிக அவதானமாக இருக்கவேண்டும் என்ற அவர் அகநிலைப்போக்கு என்பது மனஉணர்வுகளுக்கெல்லாம் (உதாரணமாகத் தமிழ் உணர்வுகள் போன்றவற்றிற்கு) இடம் கொடுத்து ஆராயும் ஆய்வு. இரண்டாவது வகை புறநிலைப்போக்கு அல்லது அறிவியல் போக்கு என்பது சான்றாதாரங்கள் அடிப்படையில் ஆய்வு

**தொகுத்துத் தருபவர்**
**- த. சிவபாலு எம். ஏ. -**

செய்து உண்மையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வாகும். தமிழ் இடப்பெயர் ஆய்வு செய்வோருக்கு இரண்டாவது அம்சம் மிகவும் முக்கியமானதாகும். சமூகப்படிநிலைகளை அதாவது அவ்வக்கிராமங்களில் வாழ்ந்த மக்களின் சமூக இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு இடப்பெயர் ஆய்வு நெறிப்படுத்தப்படவேண்டும். உதாரணமாக குடியிருப்புப் பற்றிய ஆய்வை எடுத்துக்கொண்டால் வன்னிப்பிரதேசக் குடியிருப்புக்களில் அதாவது வவுனிக்குளம், தருமபுரம், கிளிநொச்சி, விசுவமடு போன்றவற்றில் குடியிருப்புகள் யாரால் வழங்கப்பட்டன, யாருக்கு வழங்கப்பட்டன போன்ற சமூகவரலாற்றுப் பின்னணி ஆய்வுக்குத் தளமாக அமையவேண்டும். யாழ்ப்பாணத்து ஒடுக்கப்பட்ட மக்களில் எத்தனைபேர் இத்தகைய குடியிருப்பில் காணியைப் பெற்றனர்? ஆய்வாளர் கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் தனது ஆய் வில் பலதகவல்களைச் சேர்த்துக் கொண்டனர் என்பதற்கு ஆதாரமாக ஆனைக்கோட்டை அகழ்வாராய்ச்சியில் கிடைத்த தகவல்களை சான்றாதாரமாகக் கொண்டு, முன்னைய முடிவை மாற்றியும் இருக்கின்றார். பல இலக்கிய வாய்மொழிச் சான்றுகளைத் தனது ஆதாரத்துக்கு எடுத்துள்ளார். தான் எடுத்த ஆய்வுமுடிவு சிலசமயங்களில் ஆதாரஅடிப்படையில் மாறக்கூடும் என்பதை ஒப்புக்கொண்டமை ஆய்வாளருடைய திறந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது.

பேராசிரியர் வண. பங்குக் குரவருமான ஜோர்ச் சந்திரகாந்தன் அவர்களால் நூல் ஆய்வுரை நிகழ்த்தியபோது தமிழர் மத்தியில் வரலாற்று உணர்வு குறைவே. எமக்கு வரலாற்று ஆதாரங்கள் குறைந்தளவே கிடைக்கின்றன. இவற்றைக்கொண்டு ஆய்வு நடத்துவது கடினமானது.

தொடர்ந்து திருமதி. கலாநிதி குலமோகன் அவர்கள், போராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் இந்நூலுக்குத் தந்துள்ள அறிமுகவுரையில் இந்த நூலைப்போல் ஓர் இடப்பெயர் ஆய்வு நூல் ஈழத்தில் இதுவரை வந்ததில்லை என்றும் இவ்விதமான முயற்சியில் சிறந்தமுறையிலே வரப்போவதுமில்லை என்று குறிப்பிட்டிருப்பதனை எடுத்துக்காட்டி இது ஒன்றே போதும் பேராசிரியரின் நூலை மதிப்பீடு செய்ய என்றார். பேராசிரியர் அவர்கள் மிகத்தன்னடக்கத்தோடு தனது முகவுரையில் இதில் தவறுகள் அல்லது சேர்க்கப்பட வேண்டியவை இருந்தால் அவற்றை வரவேற்பதோடு திருத்திக்கொள்ளவும் முடியும் என்பதனை எடுத்துக் கூறியிருப்பது பாராட்டத்தக்கதே என்றார்.

இவரைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவாளர் திரு. செல்லத்துரை சத்தியமூர்த்தியவர்கள் நூலாசிரியரின் பண்பினையும் சமூக சமய உணர்வினையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து பதிலுரை தந்த நூலாசிரியரும் விழா நாயகருமான பேராசிரியர் பாலசுந்தரம் அவர்கள் தன்னை எழுதத்தூண்டிய காரணிகள் பற்றிக்குறிப்பிடுகையில் தனது கலாநிதிப்பட்ட கற்கை நெறிக்கான ஆய்வினை மேற்கொண்டபோது தான் இலங்கை நூதன சாலையிலும் சுவடிகள் திணைக்களத்திலும் பேணப்பட்டுள்ள பத்திரிகைகள், ஆவணங்களைப் பார்த்தபோது பல ஏற்றுக்கொள்ள முடியாத தகவல்களை அறிய முடிந்தது எனவும் எனவே இவற்றை ஆராய்ந்து உண்மைகளை நூலுருவில் தரவேண்டும் என்னும் உளப்பாங்கு எனக்கு முளைவிடத்தொடங்கியது. அதன் காரணமாக நான் மேலும் மேலும் பல தேடல்களைச் செய்யவேண்டிய ஆர்வம் தோன்றியது என்றும் குறிப்பிட்டார். இம்முயற்சிக்காக நான் யாழ். பல்கலைக்கழகத்தில் பணியாற்றியபோது பல ஊர்களுக்கும் சென்று அங்கு உள்ளவர்களுடன் ஈழத்து

தொடர்ச்சி 7ம் பக்கம்

## கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்



சென்ற இதழின், தொடர்ச்சியாக பல்கலைக்கழகங்களின் வருடாந்த செல வினை அண்ணளவாகவும், சுருக்கமாகவும் இதிலே குறிப்பிடுகிறேன். பாடச் செல வினைத் தனியாகவும், வதிவிட ச் செலவினை தனியாவும் பட்டியல் படுத்துவதுடன், மேலும் மாணவர்களது நலன் கருதி இருப்பிட வசதிகளை முன்கூட்டியே ஒழுங்குகள் செய்யும் முகமாக அதற்கான தொலைபேசி இலக் கங்களையும் முடிந்த வரை சேர்க்கப் பட்டுள்ளது.

### சர்மா (சரவணபவ சர்மா)

RYERSON
பா.செ - $6,000
உ.த.செ. - $8,000
Res.: 416 979-5043

TRONTO:
பா.செ. - $6,500
உ.த.செ.- $7,600
Res. 416-978-8027

TRENT
பா.செ. - $5,000
உ.த.செ. - $7,000
Res.: 705-748-1104 ex. 5125
Off.Cam. ex. 5128

WOTERLOO
பா.செ. - $6,500
உ. த.செ. - $7,000
Res.:- 519-888-4567 ex. 2679
Off.Cam. ex. 5725


Gonrad Grebel
பா.செ. - $5,000
உ. த.செ. - $6,000
Res.:- 519-885-0220

WESTERN
பா.செ. - $5,000
உ.த.செ. - $7,000
Res.: 519-661-3547
Off. Cam. 519-661-3550

WILFRID LAURIES
பா.செ. - $4,500
உ.த.செ. - $7,000
Res.: 519-884-1970 ex. 4256

WINDSOR
பா.செ. - $5,500
உ.த.செ. - $8,000
Res.: 519-253-3000 ex. 3279

YORK
பா.செ.- $4,000 (Regular)
பா.செ. - $6,500 (Design)
உ.த.செ. - $6,500
Res.: 416-736-5152




# விண்வெளி

43

கனி



### அந்நியர்கள் - Aliens

இது[illegible]ரயில் ஏலியன்கள் பற்றிப் பலவகையான தகவல்களை பல்வேறு கோணங்களில் பார்த்தோம். இவற்றின் முடிவாக என்ன கருதுகோளை நாம் எடுக்கலாம்? சிறிது நேரம் யோசித்துப் பாருங்கள். விஞ்ஞானிகளின் முடிவு என்ன என்பதைக் கூறுகின்றேன்.


நமது சூரியக் குடும்பத்தை விடுத்து, வேறு நட்சத்திரத் தொகுதிகளில் உயிரினங்கள் இருக்கலாம் அல்லது இருக்கின்றன. அவற்றில் சில எம்மைவிட அதிக காலத்திற்கு முன்னிர் தோன்றி இருக்கின்றன. அவற்றின் அறிவியல் நிலை, தொழில்நுட்பவியல் என்பவை எம்மைவிடப் பலப்பல மடங்கு அதிகம். இப்பிரபஞ்சத்தை ஆய்வு செய்யும் அவர்களது முயற்சி ஒரு அங்கமாக அவர்களது விண்கலங்கள் இப்பிரபஞ்சத்தில் ஏதோ ஒரு உயிர்-விஞ்ஞான தொழில்நுட்பத்தில் (நாம் இதுவரை கண்டுபிடிக்காத) பிரபஞ்சத்தின் வெளியில் வலம் வருகின்றன. அல்லது பறந்து செல்கின்றன. அவர்களது ஏலியன்-களினது பார்வையில் நமது பூமியும் தென்பட எமது பூமியை ஆய்வு செய்து பூமி பற்றிய விபரங்களையும் தமது கிரகத்துக்கு அனு[illegible]பிக் கொண்டே இருக்கின்றார்கள். அ[illegible] சமயத்தில் நமது பூமியில் உள்ளவர்களுடனும் தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றார்கள். மேலும் நமது பூமியானது ஏதோ ஒரு இடத்தில் இருந்து வந்த ஏலியன்களின் பார்வையில் மாத்திரம் அகப்படவில்லை. பல இடங்களில் இருந்து வந்த வெவ்வேறு ஏலியன்களின் பார்வையில் பட்ட எமது பூமி வெவ்வேறு ஏலியன்களின் ஆய்வுக்கு உட்படுகிறது. இதனாலேயே பல்வேறு வகையான முறையில் எம்மைத் தொடர்பு கொள்ள முயலுகின்றார்கள். அத்துடன் ஒரு சிலரின் பார்வையில் பட்ட ஏலியன்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக இராது வெவ்வேறு வடிவில் இருக்கின்றார்கள்.

இன்னமும் கொஞ்சம் ஆழமாக யோசித்துப் பார்ப்போமேயாயின், நமது கிரகம் - பூமியானது இப்பொழுதுதான் ஏலியன்களின் பார்வையில் பட்டதா? என்று கேட்கவும் தோன்றும். இதற்கான பதில்கூட ஏற்கனவே உங்களுடன் நான் பகிர்ந்து கொண்ட ஒன்றாகும். நீலகிரி மாவட்ட வழுக்கல் பாறை ஓவியங்கள் முதல்பல நம்முன்னவர்களின் ஏலியன்கள் தொடர்பான சம்பவங்களைக் கூறியுள்ளேன். ஏன், புராண நாயகர்கள் சில தேவ புருசர்கள் கூட ஏலியன்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற எமது சந்தேகத்தை உங்களுக்கு கூறியுள்ளேன். இனி ஏலியன்களின் விண்கலங்கள் - அதாவது ufo கள் - நமது பூமியை வலம்வந்தபடி உள்ளன! எமது பூமியை நோட்டம் விட்டபடி உள்ளன எனக் கூறினேன் அல்லவா (சில விஞ்ஞானிகளின் சந்தேகம்). இப்படி வலம் வரும் அவர்களது விண்கலங்கள் விபத்துக்குள்ளாவது இல்லையா? அல்லது அவர்களது விண்-களில் ஏதாவது கோளாறுகள், பழுதுகள் ஏற்படுவதில்லையா? அல்லது ஏற்படாதா என்ற கேள்விகள் எமக்கு ஏற்படலாம். இக்கேள்விகளுக்கு பதிலாக ufologist கள் எனக் கூறப்படும் "இனம் தெரியாத பறக்கும் பொருள்" ஆய்வாளர்கள் என்ன பதில் கூறுகின்றார்கள் எனப் பார்ப்போம்.

பொதுவாக இப்படியாக நட்சத்திரம் தாண்டி நட்சத்திரம், கலக்சி விட்டு கலக்சி எனப் பயணப்படக்கூடிய தொழில்நுட்பம் வாய்ந்த விண்கலங்கள் எல்லாம் இப்பாரிய தவறுகள் எதுவும் இல்லாதவாறுதான் தயாரிக்கப்பட்டு இருக்கும். பழுதுகள் ஏற்படின் கூட அவற்றைத் தாமாகவே சரி செய்யக் கூடிய அமைப்புடைய தொழில்நுட்பத்துடன் தான் விண்கலங்கள் புறப்பட்டு இருக்கும். மேலும் ஒரு கருவி பழுதுபட்டால் அதைப் பிரதிபண்ணக் கூடிய விதத்தில் ஒன்றே அல்லது இரண்டே மாற்றுக்கருவிகள் - அவையும் தாமாகவே இயங்கக்கூடிய வகையில் இணைக்கப்பட்டிருக்கும் அல்லது இணைக்கப்பட்டிருக்கலாம். விபத்துக்களைத் தாமாகவே கண்டறியக்கூடிய Sensor - சென்சர் போன்ற கருவிகளைக் கொண்டதாகவும் விபத்து நிகழவிருப்பின் அதனைத் தவிர்த்து இயங்கக்கூடிய தன்னியக்க உபகரணங்களைக் கொண்ட-தாகவும் இவ்விண்கலங்கள் இருக்கலாம். நிச்சயமாக இவ்வகையான அல்லது இதற்கும் மேலான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுடனேயே தான் விண்வெ-ளிக்கு ஏவப்படும் விண்கலங்கள் புறப்பறும் என்பதில் யாதொருவருக்கும் சந்தேகம் இல்லை. எனவே அதிபுத்திஜீவிகளான ஏலியன்களின் விண்கலங்கள் பழுதுபடவோ அல்லது விபத்துக்குள்ளாகவோ ஆவதற்-கான சாத்தியக்கூறுகள் இல்லை அல்லது மிகமிகக் குறைவு. இருப்பினும் கூட இவற்றையும் மீறி சில விபத்துக்கள் - ஏலியன் விண்கல விபத்துக்கள் - நடந்துள்ளன! அவற்றின் தாக்கங்கள் அல்லது விண்கலங்களின் சிதறல்கள் பூமியையும் வந்தடைந்துள்ளன எனச் சிலர் கூறுகின்றார்கள் - ஐயுறுகின்றார்கள்.

மறுமுறை அனுபவத்தில் கொஞ்சம் பார்ப்போம்.


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற
VIVEKA
PRINTERS



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்
முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4 SCAR., ONT.
416-410-6401



வீடு விற்க, வாங்க,
மற்றும் குறைந்த வட்டி
வீதத்தில் மோட்கேஜ்
ஒழுங்குபடுத்திக் கொள்ள,
இலவச
ஆலோசனைகளிற்கும்
ஆகக் கூடிய வீடுகளை விற்கும்
Re/Max வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை
நாடுங்கள்.



24 hrs
தொடர்புகளிற்கு: 416-677-4707
416-491-4002

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?
கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்
- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL
• ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்
பின் இவரை அழையுங்கள்



416 490-9199
S.K.THEESAN
எஸ்.கே.தீசன்
www.kalakalappu.net
கலகலப்பு தீசன்
416-490-9199

# "வன்னியில் இருந்து திரும்பிய பிள்ளைகளில் 68%மானவர்கள் போசாக்குக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்" என அதிர்ச்சித் தகவல்

வன்னியிலிருந்து தமது பெற்றோருடன் திருகோணமலைக்குத் திரும்பிக் குடியமர்ந்தவர்களின் குழந்தைகளில் 68%மானவர்கள் நிறை குறைந்தவர்களாகக் காணப்படுவதற்குப் போசாக்குக் குறைவே காரணம் என இலங்கைச் செஞ்சிலுவை தெரிவித்துள்ளது.

திருகோணமலையைச் சார்ந்த மக்கள் 10 அல்லது 12 வருடங்களுக்கு முன்னர் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக வெளியேறியவர்கள் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பெப்ரவரியில் ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து படிப்படியாக வரத்தொடங்கியுள்ளனர்.

வன்னியில் இருந்து திரும்பியவர்களில் பெரும்பாலானவர்கள் நிலாவெளி, குச்சவெளி, மூதூர், ஈச்சிலம்பத்தை போன்ற கிராமங்களைச் சார்ந்தவர்களேயாவர். மாகாண சுகாதார அமைச்சு பல்வேறு நோய்களுக்கான தடுப்பு மருந்தகளை எடுத்துக் கொண்டவர்களையே கிராமங்களுக்குள் செல்ல அனுமதித்தனர். பதினைந்து வயதிற்கு உட்பட்ட எல்லாப் பிள்ளைகளும் வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இளம்பிள்ளை வாதத்திற்கான தடுப்பு மருந்தில் இரு அளவைகள் வழங்கப்பட்டதோடு மலேரியாப் பரிசோதனைக்காக இரத்தமும் பெறப்பட்டது. இந்த மருத்துவப் பரிசோதனை, வன்னியில் இருந்து திரும்பியவர்கள் தங்கியிருந்த நிலாவெளி பொதுநல நிலையத்தில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் தலைவர் வைத்தியக் கலாநிதி இ. ஜி. ஞானகுணாளன் கடந்த ஞாயிற்றுக்கிழமை 28-04-2002 இல் இடம்பெற்ற அரசு சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பின் கூட்டத்தொடரில் பேசும்போது வைத்தியக் குழுவினர் 68%மான குழந்தைகள் போசாக்குப் பற்றாக்குறையினால் மிகமோசமாக அல்லல்படுகின்றார்கள் என்பதனைக் கண்டறிந்துள்ளதென்னும் உண்மையைத் தெரிவித்தார்.

இதனால் திருகோணமலை மாவட்டச் செஞ்சிலுவைச் சங்கக் கிளை இப்பிள்-

## த. சிவபாலு

ளைகளுக்கு உணவூட்ட உதவும் வண்ணம் பொதுநல அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. வன்னியிலிருந்து வெளியேறிய பிள்ளைகளுக்கு உதவிக்கரம் நீட்டும் அதேவேளை வன்னியில் உள்ள நலிந்துபோன சிறார்களுக்கு நாம் எமது நேசக்கரத்தை நீட்டித்தான் ஆகவேண்டும். போசாக்கு இன்மையால் நாளாந்தம் உலகுக்குத் தெரியாதது மடிந்து கொண்டிருக்கும் எமது எதிர்காலச் சமுதாயத்தை வளர்க்கவேண்டிய - பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு கடல் கடந்து வாழுகின்ற ஒவ்வொரு தமிழர்களின் கடமையாகும்.

இந்நிலமையை உணர்ந்து வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையம் தம்மாலான உதவிகளை வன்னிச் சிறார்களுக்குக் கல்வி நிதி வழங்குவதன் மூலம் சிறிதளவாவது செய்துவருகின்றமை பாராட்டத்தக்கதே. இதுவரை வன்னிப்பிரதேசத்தில் கல்வி கற்கும் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள பிள்ளைகளில் ஏறத்தாழ 50 மாணவர்கள்வரை மன்னார், முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு வழங்கி வருகிறார்கள்.

எதிர்வரும் 19.0-5.02, சனிக்கிழமை ஸ்காபுரோவில் அமைந்துள்ள எலன் சினிமாவில் (Elaine) சினிமாவில் ஒரு நிதியுதவிப் படக்காட்சியைக் காண்பித்து நிதி திரட்ட முற்பட்டுள்ளார்கள். இவ்வித முயற்சிகளை மேற்கொண்டு உதவும் திட்டத்திற்கு எம்மாலான உதவிகளை நல்க நாமாக முன்வருதல் வேண்டும்.

மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் மக்கள் வேறு இடங்களில் இருந்து வந்து குடியேறவும் எமது பாரம்பரியங்கள், நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எம்தாய் மண் எமக்கே இல்லாது போகக்கூடிய

தொடர்ச்சி 11ம் பக்கம்


**WINDOW COVERING**

YARL


**1530 WARDEN AVENUE**

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**CUSTOM MADE....**

* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

FREE ESTIMATE



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.


தொடர்புகளுக்கு: என். செல்வம்

**(905) 201-7733 (416) 419-9247**



**UNITED PERSONAL INJURY ASSOCIATES**

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?



அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

**UNITED PERSONAL INJURY ASSOCIATES**

*The Car Accident People*

ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் $172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

**தீபன் - 416-505-9804**

* 5265 Yonge Street, Suite 200, North York
* 257 Dundas Street E., Unit 1, Mississauga
* 29 King Street E., Unit 7, Kitchener
* 75 Collier St., Unit A, Barrie
* 507-251 Bank Street, Ottawa
* 195 Main St. East, 1st Floor, Hamilton



# Dr. Edo Teku

is pleased to announce

That: ***Dr. Assefa Noza***
***Dr. Janan Bilbly***
***Dr. Irina Bystrine***

**Located**
1178 King St. West
(Dufferin & King)
Toronto, Ont.

**Open**
Week Days 9am - 6pm
Saturday9am - 3pm




**Family Physicians with many years of experience have**

- Yearly Physical Exam
- Pregnant Women & Children care
- Allergy Shots
- Specialists
- Preventive Medicine
- Internal Medicine
- Counseling
- Obstetrics & Gynecology
- Drivers Medical Exam
- Pediatrics
- Medical Medical Exam
- Neurology
- Medical Laboratory
- Foot Specialist
- On Premises

**joined Kingsdale Health Center.**

Services Provided

**(416) 539 - 8181**

***Walk-In and New Patients Welcome.***


# அன்புத் தமிழ்


## அன்னப் பறவை வளர்த்த அற்புதக் காதல்



அழகிய நிடத நாட்டையுடையவன் நள மகாராசன். அவனது வெண்கொற்றக் குடைநிழலிலே கிளியும் பருந்தும் தமது பகைமையை மறந்து ஒரே கூட்டிலே ஒற்றுமையாக வாழும் இயல்புடையன. சிறந்த அறங்களை வளர்த்துத் தனது மக்களைச் சீரோடும் சிறப்போடும் பாதுகாத்து வந்த மன்னன் வாழ்க்கையிலே அதிசய அன்னப் பறவை ஒன்று குறுக்கிட்டது.

அழகிய அந்த அன்னப் பறவை 'உனக்குப் பொருத்தமானவள் ஒருத்தி இருக்கிறாள். தமயந்தி என்ற பெயருடைய தையலாள். விதர்ப்ப நாட்டு அரசன் வீமன் பெற்றெடுத்த மென்கொடி. அவள் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு ஆகிய நால்வகைக் குணங்களைத் தனது பாதுகாப்புப் படைகளாகவும் ஐந்து புலன்களை நல்ல அமைச்சர்களாகவும் ஆர்க்கும் சிலம்பை அழகிய முரசாகவும் கண்களை வேற்படையும் வாட்படையுமாகக் கொண்டு தனது முகமாகிய வெண்ணிலவுக் குடையின் கீழ் பெண்மை அரசை நடத்துகின்ற பெருமையுடையவள்' என்றெல்லாம் சொல்லிற்று. பெண்ணுக்கு வேண்டும்





இயல்புகளையும் மனக்கட்டுப்பாட்டையும் கற்பைக் காக்கும் திறனையும் விளக்கும் புகழேந்திப் புலவரின் அந்தத் தழிழேந்து பாடல் இது:

நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணி முரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு. (நளவெண்பா - 39)

அவற்றையெல்லாம் கேட்ட மன்னனுக்குத் [illegible]ந்திபால் காதல் மலர்ந்தது. 'என் காதலை [illegible]க்குச் சென்று கூறுவாயா' என்று கேளாமற் கெஞ்சினான் மன்னன்.

அன்னம் பறந்து சென்று தமயந்திக்கு நளமாகராசன் மகிமைகளை விளக்கியது. 'செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர்கள் தம் மனத்தை வாங்கும் தடந்தோளான், அறங்கிடந்த நெஞ்சன், அருள் ஒழுகும் கண்ணான், திண்தோள் வலிமையுடையான், அவனே உனக்குப் பொருத்தாமானவன்' எனக் கூறியது மட்டுமன்றி, அவன் அவள்மீது ஏற்கனவே காதல் கொண்டுள்ள கதையையும் காதிலே போட்டு வைத்தது. அது கேட்ட மங்கை மயங்கி, தன்னிலைமையையும் சென்று உரைக்கும்படி அன்னத்தை ஏவினாள்.

வாவி யுறையும் மடவனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால் - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி
என்றுரைத்தாள் பார்வேந்தன் பாவை பதைத்து.
(நளவெண்பா - 57)

தமயந்தியைக் காதல் நோய் வாட்டியது. அதனை அறியாத தோழியர்கள் அவளைப் பெற்ற தாய்க்கு 'நின் மகளின் மேனியில் என்றுமில்லாதவாறு வேறுபாடுகள் தோன்றியுள்ளன' என்று அறிவிக்க, அதனை அவள் தன் நாயகனுக்குத் தெரிவித்தாள். நாயகனாகிய வீமராசன் மகளின் மாளிகைக்குச் சென்று, நிலைமையைப் புரிந்து கொண்டு, மகளின் சுயம்வரத்துக்கான ஏற்பாட்டை மேற்கொண்டான். இதற்கிடையில் அன்னப்பறவை நளனிடம் திரும்பி வந்து, 'தமயந்தியும் காதல் வயப்பட்டாள்' எனச் சொல்லிற்று. அதுகேட்ட மன்னவன் கோதைபால் மேலும் காதல் கொண்டு மயங்கலுற்றான். எரி தழலிற்பட்ட தளிரைப் போல வதங்கினான். குழியிலே வீழ்ந்து வெளியேறமாட்டாத யானையைப் போலக் காதல் குழியில் கிடந்து அழுந்தினான்.

சுயம்வரச் செய்தி கேட்டு விதர்ப்ப நாட்டுக்கு மன்னர் பலர் விரைந்தனர். நளனும் சென்றான். வானுலகத்திலிருந்து தேவர்கள் சிலருடன் தேவேந்திரனும்

### கவிஞர். வி. கந்தவனம்

வந்துகொண்டிருந்தான். வழியிலே தேவேந்திரன் தனக்கு ஓர் உதவி செய்யும் வண்ணம் நளனை வேண்டினான். நளனும் என்ன உதவி என்று கேளாமலே இசைந்துவிட்டான்.

'நீ வீமராசன் மகளிடம் சென்று தேவர்களாகிய எங்களில் ஒருவருக்கு மாலை சூட்டுமாறு சொல்வாயாக' என்று இந்திரன் கேட்கவும் நளன் திகைத்தான். எனினும் தேவர்கள் பணியை முதன்மையாகக் கொள்வதே சிறந்த அறம் ஆதலால் அந்த அறத்தைச் செய்வதே கடமை எனத் துணிந்தான். கடமைக்கும் காதலுக்கும் இடையில் தத்தளித்துப் பின்னர் ஒருவாறு தெளிந்தான்.

இந்திரன் வரத்தால் எவரும் காணாதவாறு தமயந்தியின் மாளிகை போய்ச் சேர்ந்தான் நளன். அங்கே இருவர் கண்களும் தம்முள் கலந்தன. அவள் அவன் அழகில் மயங்கி நின்றாள் .அவளைக் கட்டித் தழுவ வேண்டும் போல இருந்தது அவளுக்கு. ஆனாலும் நாணம் அவளைத் தடுத்தது.

அவனோ தனது காதலைக் கடமை உணர்வினால் அணைத்துக் கொண்டு விடயத்தை வெளிப்படுத்தினான். அவன் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற தமயந்தி, 'மன்னவனே இந்தச் சுயம்வரமே நின்பொருட்டுத்தான். இருந்தாலும் தேவர்களையும் வரச்சொல்' என்றாள். அது கேட்ட தேவர்கள் மிக்க மகிழ்ச்சியுற்று நளமகாராசன் வடிவிலே சுயம்பர மண்படத்தில் அவன் பக்கமாக வீற்றிருந்தனர்.

மண்படத்தில் மாலையுடன் தமயந்தி வந்தாள். மன்னர்களைச் சேடி அறிமுகம் செய்துவரக் கேட்டுக் கொண்டே வந்தாள். நளன் பக்கம் வந்தபோது அவனைப் போல வேறு சிலரும் இருக்கக் கண்டு அவளது உள்ளம் ஊசலாடியது. எனினும் விவேகத்தால் தனது காதலைக் காப்பாற்றிக் கொண்டாள். கண் இமைத்தலாலும் கால்கள் நிலத்திலே படிவதாலும் நளனை அடையாளம் கண்டு அவனுக்கே பொன்மாலை சூட்டினாள். விண்ணரசர் எல்லாரும் வெட்கமுற்றார்.

விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர -மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். (நளவெண்பா - 161)


**CONCORD AUTO GLASS**

PROFESSIONAL GLASS INSTALATION

*GLASS REPLACEMENT STARING FROM $99*
*For All Domestic & Forighen Cars, Trucks & Heavy Equipment*

Life Time Workmanship Warranty

* Stone Chip, Repair
* We Specialize In Door Glass, Back, Windshield & Power Door Problems

Call us First

**416 858-1910**



14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

(416) 267-0408


### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 130

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | ■ | ■ |
| 3 | | | | | | | 4 |
| | ■ | ■ | ■ | ■ | 5 | ■ | |
| 6 | | ■ | | 7 | | | 8 |
| 9 | 10 | ■ | 11 | | | ■ | |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| ■ | 12 | | 13 | | | | |

**இடமிருந்து - வலம்**
1. துளை வாத்தியம் ஒன்று
3. அருச்சுனன்
4. அணி (வல - இட)
6. பிள
8. துதி (வல - இட)
9. வருந்து
11. சுவர்
12. நீர் கிண்ணங்களைத் தட்டி எழுப்பப்படும் இசை

**மேலிருந்து - கீழ்**
1. மிகமகிழ்ச்சி
2. படகோட்டி
4. தண்டலை
5. விடை
7. மன்மதன் துணைவி
10. கண் (கீழ் - மேல்)
13. அறம் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வெ | ளி | ச் | ச | வீ | டு | ■ | உ |
| ள் | ■ | ■ | மு | | பா | ■ | ள் |
| ளி | க | ■ | த் | | ப் | ■ | ளூ |
| க் | ■ | ■ | தி | | சா | ■ | ரா |
| கி | ன் | ன | ர | ர் | ■ | ■ | ட் |
| ழ | ■ | ■ | ம் | | மி | று | சி |
| மை | ண் | தி | ■ | டை | ச | ■ | ■ |
| ■ | ■ | பொ | ங் | கு | த | மி | ழ் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களு-க்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் MAY 24, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**129இல் வெற்றி பெற்றோர்**
1) S. Somasundarm, Toronto, Ont.
2) J. Tavamani, Mississauga, Ont.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**



**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

**தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459**

**253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai**


இடப்பெயர் ஆய்வு... 3ம் பக்கத் தொடர்ச்சி

கலந்துரையாடி பெற்ற தகவல்கள் மிக அதிகம் என்றும் குறிப்பிட்டார். வில், கம், பாய் போன்ற இட ஈற்றுச் சொற்கள் தமிழ்ச் சொற்களே என்பதனை நான் ஆதாரபூர்வமாக முன்னர் சிங்களப் பெயர்கள் எனக்கூறியவர்களின் கூற்றுக்களை மறுத்துரைத்துள்ளேன் என்றும் கூறிய அவர், இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்துள்ள உங்களின் மண்பற்று மொழிப்பற்றினை மதிப்பதாகவும் வந்து சிறப்பித்தமைக்கு நன்றிதலையும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இந்நூல் வெளியீட்டகத்தின் உரிமையாளரும் தமிழர் செந்தாமரையின் பிரதம ஆசிரியரும் ஆகிய திரு. கனக. அரசரத்தினம் அவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரியப்படுத்தினார்.

# உலககிண்ணப் போட்டியில் நீங்களும் அதிர்ஷ்டசாலியாகலாம்!!! (உதைபந்தாட்டம்)



நீங்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் உலககிண்ண (World Cup) போட்டிகளில் உங்கள் திறமையும் அதிர்ஷ்டத்தையும் பரீட்சிக்க "விளம்பரம்" பத்திரிகை மே 15ஆம் திகதி வெளியீட்டிலும், யூன் 1ஆம் திகதி வெளியீட்டிலும் ஒரு சந்தர்ப்பத்தைத் தந்துள்ளது.

மே மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உலககிண்ணப் போட்டிகள் ஜப்பானிலும் கொரியாவிலும் நடைபெற உள்ளது யாவரும் அறிந்ததே. போர்த்துக்கல் நாட்டின் இளம் பிரசித்த பெற்ற வீரரான f(போற்றி)யும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த பிரசித்தி பெற்ற வீரரான பெக்கம் உம் காயநிலையில் இருந்து விடுபட்டு மீண்டும் தத்தமது நாடுகளுக்கு விளையாடுவார்கள் என்ற அறிவிப்பு பல உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு மகிழச்சி அளித்துள்ளது. இப்போட்டிகள் ஜப்பான், கொரியா நாட்டின் நேரத்தின் படி கனேடிய நேரம் 12 மணித்தியாலம் பின்னோக்கியது. அதாவது ஜப்பான் நேரப்படி பிற்பகல் 3:30 மணி, எமக்கு கனேடிய நேரப்படி அதிகாலை 3:30 ஆகும். இறுதியாட்டம் யூன் 30ஆம்

## எஸ். கணேஷ்

திகதி ஜப்பான் நேரப்படி இரவு 8:00 மணியாகும். கனேடிய நேரப்படி யூன் 30 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணியாகும்.

இங்கு தரப்பட்ட போட்டி விதிமுறைகளின் படி தரப்பட்டுள்ள அட்டவணையை வெட்டி எடுத்து உங்கள் திறமையைப் பயன்படுத்தி தரப்பட்டுள்ள பெட்டிகளை நிரப்பி யூன் 2ஆம் திகதிக்கு முன்னர் "விளம்பரம்" பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மே மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் முழுதாக பெட்டிகளை நிரப்பி அனுப்பி வைக்கும் அதிஷ்ட்டசாலிக்கு முழுப் புள்ளிகள் வழங்கப்படும். மே மாதம் 30ஆம் திகதியில் இருந்து யூன் 2ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும் வாசர்களுக்கு மொத்தப் புள்ளியில் 2 புள்ளிகள் குறைக்கப்படும். இந்த ஏற்பாடு விளம்பரம் பத்திரிகை (மே 15ஆம் திகதி) வெளியீட்டைத் தவறவிட்டவர்களுக்காக, அடுத்த வெளியீடான யூன் 1ஆம் திகதி வெளியீட்டை பெறுபவர்களுக்காக பிரத்தியேகமாக செய்யப்பட்ட ஏற்பாடாகும். யூன் 2ஆம் திகதிக்குப் பின்னர் எந்தவிதமான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதிக புள்ளிகளைப் பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளும் மிகச் சிறந்த பரிசுகளை பின்வரும் வியாபார ஸ்தாபனங்கள் வழங்கும்.

முதலாம் பரிசு: Singapore Communication
இரண்டாம் பரிசு: Scarborough Rangers
மூன்றாம் பரிசு: Scarborough Rangers
நான்காம் பரிசு: Scarborough Rangers

<u>போட்டிவிதிகள்:</u>

1. "விளம்பரம்" பத்திரிகை வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் இலவசமாகக் கலந்து கொள்ளலாம்.
2. "விளம்பரம்" பத்திரிகை வெளியீட்டாளர்கள் (நிர்வாகிகள்) எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியாது.
3. 8 Groups இல் A1 - winners, A2 - Runners, 8 Group இலும் 2 நாடுகளை நீங்கள் தெரிவு செய்யலாம். தொடர்ந்து World Champions வரை நாடுகளை நீங்கள் தெரிவு செய்யலாம். மொத்தப் புள்ளிகளை இருவர் சமனாக தெரிவு செய்தால் கோல் (goal) அடிப்படையில் வெற்றி வழங்கப்படும். அதாவது நீங்கள் World Champion ஆக தெரிவு செய்யும் நாடு மொத்தமாக சகல ஆட்டங்களையும் சேர்த்து எத்தனை கோல்களை அடிக்கும் என்பதை நீங்கள் குறிப்பிட வேண்டும்.

**<u>4 அடிப்படைப் புள்ளி விதிகள்:</u>**

* 1 புள்ளி - முதல் சுற்றில் சரியாக தெரிவு செய்யப்படும் 2 நாடுகள் / Group (16 நாடுகள்) - (16 புள்ளிகள்)
* 2 புள்ளிகள் - இரண்டாவது சுற்றில் தெரிவு செய்யப்படும் 8 நாடுகள் (16 புள்ளிகள்)
* 3 புள்ளிகள் - கால் இறுதியாட்டத்தில் (Quarter Finals) வெற்றிபெறும் 4 நாடுகள் (12 புள்ளிகள்)
* 4 புள்ளிகள் அரைஇறுதியாட்டத்தில் (Semi Final) வெற்றிபெறும் 2 நாடுகள் (8 புள்ளிகள்)
* 5 புள்ளிகள் - மூன்றாவது இடத்திற்குப் போட்டி போட்டு வெற்றி பெறும் 1 நாடு (5 புள்ளிகள்)
* 6 புள்ளிகள் - சரியாக தெரிவு செய்யப்படும் World Champion - 1 நாடு (6 புள்ளிகள்)

**<u>5. சமம் (TIES):</u>**

* சரி சமமாகப் புள்ளி பெறுபவர்களில் World Champion இன் மொத்த கோல்களில் இருந்து கணிக்கப்படும்.

* **2002 WORLD CUP SOCCER POOOL**

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| France | Spain | Brazil | South Korea |
| Senegal | Slovenia | Turkey | Poland |
| Uruguay | Paraguay | China | United States |
| Denmark | South Africa | Costa Rica | Portugal |

அதிலும் சரி சமமாக இருந்தால் தெரிவு செய்யப்படும் Winners,

| GROUP E | GROUP F | GROUP G | GROUP H |
|---|---|---|---|
| Germany | Argentina | Italy | Japan |
| Saudi Arabia | Nigeria | Ecuador | Belgium |
| Ireland | England | Croatia | Russia |
| Cameroon | Sweden | Mexico | Tunisia |

REQUIRED:

Select the top two teams, in order of finish, for each of the eight groups.
Map your selections to the second round matches and select winners.
Continue until you have selected the World Cup champions.
Predict the TOTAL goals scored by the champions throughout the tournament (for tie breaker purposes).

POINTS:

1 point for each correct group pick (maximum 16 points)
2 points for each correct second round pick (maximum 16 points)
3 points for each correct quarterfinal pick (maximum 12 points)
4 points for each correct semifinal pick (maximum 8 points)
5 points for each correct semifinal pick (maximum 5 points)
6 points for each correct semifinal pick (maximum 6 points)

TIES:

The tie-breakers are as follows:
1) person closest to total goals scored by World Champions
2) most correct picks regardless of point value (32 picks)

(Most Correct Picks) REGARDLESS OF POINT VALUE (32 Picks) இதில் இருந்து தெரிவு செய்யப்படும்.

6. இந்தப் போட்டிகளில் ஏதாவது கேள்விகள் இருந்தால் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும். எஸ். கணேஷ் 416-566-1575

7. எட்டு Group இல் இருந்தும் இரண்டு நாடுகளின் படி 16 நாடுகள் தெரிவு செய்யப்படும். ஆனால் சரியாக Runners மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

8. அட்டவணைப் பகுதியை மட்டும் வெட்டியெடுத்து விளம்பரம் தொலை-நகலுக்கு அனுப்பவும்.
Fax: 416-282-4978

YOUR NAME: ____________________
E-MAIL: ____________________
PHONE: ____________________

INTERNAL USE ONLY RECEIVED[redacted]
ENTERED: __________ [redacted]

GROUP WINNERS

A1 [ ] A2 [ ]
B1 [ ] B2 [ ]
C1 [ ] C2 [ ]
D1 [ ] D2 [ ]
E1 [ ] E2 [ ]
F1 [ ] F2 [ ]
G1 [ ] G2 [ ]
H1 [ ] H2 [ ]

ROUND OF 16

1 E1 vs B2 [ ]
2 A1 vs F2 [ ]
3 F1 vs A2 [ ]
4 B1 vs E2 [ ]
5 G1 vs D2 [ ]
6 C1 vs H2 [ ]
7 H1 vs C2 [ ]
8 D1 vs G2 [ ]

QUARTER FINALS

9 W2 vs W6 [ ]
10 W1 vs W5 [ ]
11 W4 vs W8 [ ]
12 W3 vs W7 [ ]

SEMI FINALS

13 W10 vs W11 [ ]
14 W9 vs W12 [ ]

THIRD PLACE

15 L13 vs L14 [ ]

FINAL

16 W13 vs W14 [ ]

TOTAL GOALS SCORED BY CHAMPS: __________

# வீ வீ ரியூரறிங் சென்ரர்

2390 எக்ளின்ரன் அவனியு, #204, ஸ்காபரோ, ஒன்ராறியோ, M1K 2P5
தொ.பே.: (416) 701-1763 / (905) 471-3084

சகல பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆதரவாளர்களுக்கும்:

# பரிசளிப்பு விழா 2002

இத்தாபனத்தின் பரிசளிப்பு விழா மே 17ஆம் திகதி (17 -05-2002) வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணிக்கு 729-733 பேர்ச்மவுன்ட் வீதியில் (எக்ளின்ரன்/பேர்ச்மவுன்ட்) உள.எ கனடா கந்தசுவாமி கோயில் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அவ்வமையம்

## Dr. P. ஞானேந்திரன் F.R.C.S. (Canada)

விரிவுரையாளர் ரொரன்ரோ பல்கலைக்கழகம்
பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பிரதம விருந்தினர், மற்றும் கல்வி, பொதுசன ஊடகப் பிரமுகர்களின் உரைகள் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து இத்தாபனத்தின் ஊடாக Canadian Natonal Mathematics Competition - Gauss contest 2001, Canadian National Mathematics League Contests-2001, 3ஆம், 6ஆம் வகுப்பீ மாகாணப் பரீட்சை போன்றவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

நன்றி!

இங்ஙனம்
பொ. பாலேந்திரன் இயக்குனர்

# SISTER FATIMA

Spiritual Psychic Advisor
Palm Card, Crystal Ball, Psychicreadings, Also Holistic Healer And Adcisor
God gifted healer with the power strength, and knowledge to help you overcome all your problems such as:

* Love * Health * Marriage / Divorce * Separation
* Bad Luck, Evill influence *Infertility * Lucky day & Numbers
* House Blessings * Removing Black Magic

**SATISFACTION GUARANTEED**
**416-264-5836 (Eglintion & Markham Area, Scar.)**


# YARLCAN STEAM CLEANING

*** CARPET CLEANING * DUCT CLEANING**

உங்கள் சகலவிதமான Cleaning
தேவைகளுக்கும் அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436
Cell: 721-9709





## செல்லையா அமிர்தாம்பிகையின் மரண அறிவித்தல்

பிறப்பு - ஜனவரி 10, 1938 இறப்பு - மே 14, 2002

மறுவன்புலவை பிறப்பிடமாகவும், உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் இப்போது கனடாவில் (Scarborough) வசித்து வந்தவருமான திருமதி. செல்லையா அமிர்தாம்பிகை 14 - 05 - 2002 இல் Scarborough இல் சிவபதமடைந்தார்.

இவர் செல்லையாவின் அன்பு மனைவியும் கந்தையா முத்துப் பிள்ளை அவர்களின் அன்பு மகளும் உரும்பிராய் வடக்கு நடராசா சீனிக்குட்டியின் அன்பு மருமகளும்

சத்தியவதி (கொழும்பு), ஜெயவதி (உரும்பிராய்), தயாவதி, பிரேமாவதி (இலண்டன்), தர்மதி (வேந்தா), விஜயபாலன் (பாலன்), கருணாவதி (கண்ணா), கங்காவதி (கங்கா) Scarborough ஆகியோரின் அன்புத் தாயாரும்

மதிரூபன் (கொழும்பு), நாகேஸ்வரன் (Scarborough), ஸ்ரீரங்கநாதன், முரளிதரன் (இலண்டன்), சிவகுமார் (குமார்), ஸ்ரீதரன், ஹரிகிருஷ்ணா (கண்ணன்), சத்தியகலா (கலா) ஆகியோரின் அன்பு மாமியாரும்

கிருத்திகன், கோமுகன், நிதர்சன், நவீன், விதுனன், ரம்யா, சாரங்கி, மதுரா, பிரியங்கன், மீனா, மிதுஷா, சரண்யன் ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும்


சந்திரசேகரம், யோகாம்பிகை, நகுலாம்பிகை, கோமளாதேவி, பிறைசூடி, மாயவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்

கந்தையா, காலஞ்சென்ற பொன்னம்மா, சின்னத்தங்கம், இரத்தினம், பொன்னையா ஆகியோர் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: பாலன் - 416-286-4963
தர்மா (வேந்தா) - 905-201-9370
கண்ணன் கெங்கா - 416-289-6955
கண்ணா - 416-752-2532

# வெளிவந்து விட்டது




**உலகத் தமிழோசை கிடைக்கும் இடங்கள்**

**ரொறன்ரோ பெரும்பாகம்**

- Yarlnagar Traders 416-285-0587
- Samy & Sons 416-298-1598
- Best Way 416-444-8202
- Thuvarakas 416-757-1095
- Royal Grocery 416-693-8078
- AVM Varities Stores 416-285-3347
- ARK Market 416-421-3429
- Siva Brothers 416-532-1107
- Ak International
- Kalaimahal Book Deopt 416-921-5018
- Uthayas SuperMarket 416-740-7971
- Thomas
- Aruna Market
- Rajee 416-240-0039
- Shangar International 416-759-5100
- Serendip 416-261-2230
- Kumaran Video 416-264-4254
- Ganesha Spicey Mart 416-289-2292
- Saravanas Market 416-439-5727
- Colombo food
- New Spiceland 416-292-9769
- Greenlands 416-609-3333
- Daily Needs 416-490-7703
- Poompugar 416-499-8386
- SP Importers 416-261-4737
- Priyas 905-944-1292
- Yogas 416-267-0408
- Embassy 416-332-8451
- Gnanams 416-750-8118
- Bread Master Bakery 416-299-5083
- Vallin Super Market 416-724-5453
- Lourdes 416-264-1546

**Montreal**
Lingam 1 -514-345-8445


**Ottawa**
Nanthan 1 614 -823-6667

**Vancuvour**
•Kumar • Thukkas • Kesavan

**USA - Newyork** - • Subas

உலகத் தமிழோசை சஞ்சிகையை
விற்பனை
செய்ய விரும்புபவர்கள்
முருகன் புத்தகசாலை (416) 285-9118
விளம்பரம் (416) 282-8059
ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளவும்

# மௌனகுரு, சித்ரலேகா மௌனகுருவுடனான கலந்துரையாடல்



கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு பீடாதிபதி பேராசிரியர் மௌனகுரு மற்றும் பேராசிரியை திருமதி. சித்ரலேகா மௌனகுரு ஆகியோருடனான கலந்துரையாடல் ஒன்று இலக்கிய அகவி வட்டத்தினரால் மே மாதம் 11ஆம் நாள் சனிக்கிழமை மாலை 4:30 மணிக்கு Mid Scarborough Community Ctr. அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திரு. மகாலிங்கம் தலைமை தாங்கினார். மௌனகுரு கனடிய நாடக அரங்கு, இலங்கையில் நாடக முயற்சிகள், இன்றைய நாடக முன்னோடிகள் "குழந்தை" சண்முகலிங்கம், சிதம்பரநாதன் போன்ற விடயங்கள் பற்றி விரிவாகப் பேசினார். பின்னர் பேசிய சித்ரலேகா இலங்கையில் இன்றைய தமிழிலக்கியம், பெண்ணிய அமைப்புக்கள் வாழ்க்கை முறை போன்றன பற்றி ஆழமான கட்டுரை ஒன்றை சமர்ப்பித்தார்.

பின்னர் நடைபெற்ற கலந்துரையாடலில் பறைமேள வாத்தியம், புலம்பெயர் இலக்கியம், பெண்ணியப் படைப்புக்கள் மற்றும் மொழி பெயர்ப்பு நாடகங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டன. சுமார் 8:30க்கு முடிவுற்ற இக் கூட்டத்தில் பலமூத்த எழுத்தாளர்களைக் காணக் கூடியதாகவிருந்தது.

---

வன்னி ....
6ம் பக்கத் தொடர்ச்சி

நிலை ஏற்படவும் நாம் வழிசமைத்தவர்களாவோம். எனவே நாம் சிந்தித்து செயற்படவேண்டிய காலம் இது. எம் சிறார்களைப் பாதுகாக்க எம் இதயத்தை அவர்களுக்காக்குவோம். இதற்கு உதவுவது நமது கடமைகளில் ஒன்றாகும். ஆதாரம் தமிழ்நெற் இணையம்.


**Computer Training Center** — **NEA-TEC Solution Provider**

To Register: Call **(416) 438-6614** or visit **www.nea-tec.com**

| Programming | |
|---|---|
| C Programming | $175 |
| Advanced C Programming | $200 |
| C++ Programming | $175 |
| C++ for C Programmers | $175 |
| Introduction to Java | $200 |
| Advanced Java | $225 |
| Java Web Application | $250 |
| C++ for Java Programmers | $200 |
| Web Design (HTML/Animation) | $150 |
| Web Design && Architecture | $200 |
| Intro to Visual Basic 6.0 | $150 |
| Advanced Visual Basic 6.0 | $200 |
| Flash 5.0 | $125 |
| Internet && World Wide Web | $249 |

| High School/College/University Students Package | |
|---|---|
| Introduction to C Programming | $150 |
| Introduction to C++ Programming | $150 |
| Introduction to Java Programming | $175 |
| Pascal Programming | $100 |
| Web Design I (with HTML) | $ 75 |
| Web Design II (With Front page) | $ 75 |
| Web Design III (With Animation) | $150 |
| Flash 5.0 | $ 75 |

| Computer Hardware Courses | | |
|---|---|---|
| A+ Certification | Core | $199 |
| | Windows | $199 |
| PC Assembling / Trouble Shooting | | $199 |

| Application Software | |
|---|---|
| Introduction to Computers | $125 |
| Senior Starters | $100 |
| Kids Computer Courses | $ 75 |
| Key Boarding/Data Entry | $100 |
| Microsoft Office 97/2000 | $325 |
| • Word 97/2000 | $120 |
| • Excel 97/2000 | $120 |
| • P/ Point 97/2000 | $120 |
| • Access 97/2000 | $120 |
| Microsoft Word Macros | $130 |
| Microsoft Excel Macros | $130 |
| Crystal Report | $125 |
| AccPac Windows v4.2 | $475 |
| • Account Payable | $175 |
| • Account Receivable | $175 |
| • General Ledger | $175 |

| Unix/Linux Courses | |
|---|---|
| Introduction to Unix | $ 90 |
| Shell Scripting | $199 |
| Unix System Admin | $199 |

**Message**

- *Convenient time*
